# ஆன்மிகச் சுற்றுலாவில் மதுரை ஆறுகளும் படைக்கோவில்களும்

**இலட்சுமி கார்மேகம்[1], எஸ்.கேசவன்[2]**

## ஆய்வுச்சுருக்கம்:

*மனித இனம் பயணம் செய்வது தொல்வழக்கமாகும். உலா, பயணம் முதலியன சுற்றுலா (tour) பொருண்மையிலான சொற்களாகும். Tour என்னும் சொல் TORNUS என்னும் இலத்தீன் மொழியின் அடிப்படையில் தோன்றியது. சுற்றுலா செல்லுதல் மனிதனின் உலகியல் அறிவு, பல்லினச் சூழல், மானுடப் பண்புகளை அறிவதற்கு உதவுகிறது. சுற்றுலாவின் வகைகளுள் ஒன்றான ஆன்மிகச் சுற்றுலா வாழ்வில் இன்றியமையாதது. அவ்வகையில் மதுரை நோக்கிய ஆன்மிகச் சுற்றுலா பற்றிய பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது. உலகின் மூத்த இனமான தமிழினம் தோன்றி வளர்ந்த குமரிக்கண்டத்தின் எச்சங்களைத் தாங்கியதாய் மதுரை நகர் விளங்குகின்றது. முதல், இடை, கடைச் சங்கங்கள் போற்றிய நகரம் மதுரை நகரமாகும். மதுரை நகரின் சிறப்பினைக் காலந்தோறும் இலக்கியங்கள் பதிவு செய்து வருகின்றன. இலக்கியத் தொன்மையும் நீண்ட நெடிய வரலாற்றையும் உடைய மதுரை மாநகர் தமிழர்களின் கலாசாரம், பண்பாடு, கலைகள் மிக்க வாழ்வியல் முறைகளை அறிய உதவுகிறது. தமிழர் போற்றிய காதலும் வீரமும், தமிழர் வணங்கிய கடவுளுக்கான கோவில்களும், தமிழர் அடையாளம் தாங்கிய பல்வேறு தொல்லியல் நினைவுச் சின்னங்களைப் பெற்றுள்ள நகரமாகவும் மதுரை மாநகர் விளங்குகின்றது. அத்தகைய மதுரை நோக்கிய கலாசார பயணத்தில் அந்நகர்சூழ அமைந்துள்ள ஆறுகளையும் முருகனின் படைவீடுகளையும் விளக்குவது இந்த ஆய்வின் முக்கிய நோக்கங்களாகும். வைகை நதியின் நாகரிகத்தையும் தற்காலத்தில் வைகையின் இயல்பினையும் காட்சிப்படுத்துவதுடன் சிலம்பாறு (நூபுரகங்கை) குறித்த இலக்கிய பதிவுகளும் தற்காலத்தில் நூபுர கங்கையின் இயல்பையும் விளக்குவதாக இந்த ஆய்வு அமைகிறது. முருகப்பெருமானின் அறுபடைவீட்டில் முதலாவது படைவீடான திருப்பரங்குன்றம், ஆறாம் படைவீடான பழமுதிர்ச்சோலை குறித்த கள ஆய்வில் படை வீடுகளின் தனித்தன்மை, கடவுள்களின் சிறப்பு, தல வரலாறு, கதைகள், வழிபாட்டு முறைகள், நுண்கலைகள் முதலியன குறித்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வு பயணிக்கிறது.*

**திறவுச்சொற்கள்:** ஆன்மிகச்சுற்றுலா, மதுரை, ஆறுகள், படைக்கோவில், பயணச்சிறப்பு

[1]*தமிழ்த்துறை, டிஆர்பிசிசிசி இந்துக் கல்லூரி, சென்னை*
drlakshmikarmegam@gmail.com
[2]*இந்துநாகரிகத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.*
kesavans@esn.ac.lk

**அறிமுகம்**

மனித இனம் பயணம் செய்வது தொல்வழக்கமாகும். உலா, பயணம் முதலியன சுற்றுலா (tour) பொருண்மையிலான சொற்களாகும். Tour என்னும் சொல் tornus என்னும் இலத்தீன் மொழியின் அடிப்படையில் தோன்றியது. சுற்றுலா செல்லுதல் மனிதனின் உலகியல் அறிவு, பல்லினச் சூழல், மானுடப் பண்புகளை அறிவதற்கு உதவுகிறது. தமிழர் பயணம் குறித்த ஆய்வுகள் நிலம், நீர் வழியிலான நோக்கில் ஆராய்ந்து கூறக் கூடிய, தகவல்கள் மிகுதி. தமிழினம் தற்காலத் தமிழ்நாடு கடந்து இலங்கை, சிங்கப்பூர், தாய்லாந்து, சீனா, கொரியா, இந்தோனேசியா, பர்மா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்று கண்டங்கள் கடந்து வாணிபம் செய்துள்ளமைக்கான சான்றுகளைப் பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து முன்னிறுத்தி வருகின்றன. அதற்குரிய சான்றுகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது.

அவ்வகையில் தமிழர் குறித்தறிய, தமிழரின் வரலாற்றை அறியவல்ல ஆய்வுத் தேடல்களுக்கு அடித்தளமாய் அமைவது தமிழகத்தின் கோவில்கள் ஆகும். தமிழர் சுற்றுலாவில் இன்றியமையாத இடம் வகிப்பது ஆன்மிகச் சுற்றுலா. அத்தன்மையில் தமிழனின் தொல்லியல் வாழ்வு பற்றி அறிய, உலகின் மூத்த இனமான தமிழினம் தோன்றி வளர்ந்த குமரிக்கண்டத்தின் எச்சங்களைத் தாங்கிய மதுரை மாநகரை மையமாய்க் கொண்டு இவ்வாய்வு அமைகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை நோக்கிய கலாசார பயணத்தில் அந்நகர்சூழ அமைந்துள்ள ஆறுகளுள் இலக்கியம் மற்றும் புராணங்களுடன் தொடர்புடைய ஆறுகளான வையை மற்றும் சிலம்பாறு குறித்தும் முருகப் பெருமானின் படைவீடுகளுள் முதல் படைவீடான திருப்பரங்குன்றம் மற்றும் ஆறாம் படைவீடான பழமுதிர்ச்சோலை ஆகியன ஆய்வு எல்லையாகத் திகழ்கின்றன. தமிழரின் ஆன்மிகம்சார்ந்த தொன்மையைப் புலப்படுத்தும் வகையில் பழந்தமிழ் இலக்கியங்களை முன்னிருத்தி விளக்கமுறை, அணுகுமுறையில் இக்கட்டுரை ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா - ஆன்மிகச் சுற்றுலா பற்றிய அறிஞர்களின் விளக்கங்கள்**

மனிதனின் செயல்பாடுகள், இயற்கையின் கூறுபாடுகள் முதலியவற்றில் இதுகாறும் அறிந்திராதவற்றை ஆய்வு செய்யப் புகுதலே சுற்றுலா என்பது பிரிமால்ட் அவர்களின் விளக்கமாகும். டாக்டர் ஷியாடின் அவர்கள் ‘ஓய்வு கவனமாற்றம் மற்றும் கலாசாரக்கூறுகளில் மனநிறைவளிக்கும் ஒரு சமூக செயற்பாடே சுற்றுலா‘ என்கிறார். “விளையாட்டு போட்டிகளைக் காணச் செல்லல் ஊர்களைச் சுற்றிப்பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், உல்லாசப்படகுகளில் பயணம் செய்தல், முகாமிடல், மனமகிழ்வுக்காக பிற இடங்களை நோக்கிச் செல்லுதல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக கருதப்படுவதே சுற்றுலா” என்பது ஜோஸ் இக்னாசியோ டி அரில்லாகா என்பவரின் வித்தியாசமான விளக்கமாகும்.

ஜோவியக் என்பார் சுற்றுலாவை ஒரு சமுதாய இயக்கமாகவே காண்கிறார். ”ஓய்வெடுப்பதற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான ஒரு சமுதாய இயக்கம் இது என்பது அவரது கருத்தாகும். எனவே சுற்றுலாவியல் தொழில்உறவு பூண்ட சமுதாய அறிவியலாக விளங்குகிறது என்பது உண்மையாகும் (தங்கமணி, ம.இ.ரா., 2004:5). "I shall Dream" இது டாக்டர் தேஜ்வீரசிங் அவர்கள் சுற்றுலாவிற்குத் தந்த விளக்கம். அதாவது “நான் கனாக் காண்பேன்“ ”கற்பனைக்கும் உண்மைக்கும் இடையே நடைபெறும் உரையாடலே சுற்றுலா” (Dialogue between Imagination and destination) என்பது ஒரு புரட்சிகரமான விளக்கம் (தங்கமணி, ம.இ.ரா., 2004:6).

சுற்றுலா நவீன காலத்தில் ஒரு தனிச்சிறப்பிடத்தை வகிக்கின்றது. இழந்த வலிமையை மீண்டும்பெற மாறுபட்ட சூழ்நிலைகளைக் காண, இயற்கை அழகினைக் கண்டு மகிழ, அது ஒரு வளர்ந்துவரும் தேவையாகிவிட்டது என்ற எ.ஃ.பிரியூலர் (தங்கமணி, ம.இ.ரா., 2004:6) விளக்கம் சுற்றுலாவின் நவீனகால அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பூர்கர்ட்டு, மெட்லிக் போன்ற அறிஞர்கள் “சுற்றுலா என்பது ஒரு பயணியின் குறுகிய காலப்பயணமாகும். அவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து பயணம் செய்வர். அவர்கள் பிற இடங்களில் தற்காலிகமாக தங்குவர்“ என சுற்றுலாவின் தன்மையைச் சுட்டுகின்றனர். அவர்கள் மேலும் “சுற்றுலா ஓய்வு நேரத்தோடும் உலகத்தோடும் தொடர்பு கொண்டது. அது ஒரு தொழிலகமும் ஆகும். நாடுகளும் நகரங்களும் கிராமப்பகுதிகளும் பயணிகளை கவர்ந்து இழுப்பதால் அதற்கு நல்ல எதிர்காலம் உள்ளது. அது செல்வத்தையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது’’ (தங்கமணி, ம.இ.ரா., 2004:6) என்று சுற்றாலாவின் சிறப்பையும் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

சுற்றுலாவின் வகைமையை நாடு, நகர், தனி நபர், குழு என்று பொதுவாகப் பகுப்பர். மேலும் பண்பாடு, கல்வி, கலாசாரம், ஆன்மிகம், தொல்லியல், மருத்துவம், பொழுதுபோக்கு, அரசியல், விளையாட்டு, ஓய்வு, இன்பம், பருவகாலம், விளையாட்டு, தொழில், சூழலியல், விடுமுறை என்று சுற்றுலாவைப் பல்நிலைகளில் வகைப்படுத்தலாம். அவ்வகைகளுள் ஒன்றான ஆன்மிகச் சுற்றுலா சமய வழிபாட்டை முன்னிட்டு அமையக்கூடியது. சமயம் சார்ந்த பயணம் இன்றியமையாதது. உலகு எங்கிலும் உள்ள புனிதத் தலங்களைக் காண, சமய நம்பிக்கையின் அடிப்படையில் மனிதர்கள் பயணம் செய்வது ஆன்மிகச் சுற்றுலா ஆகும். ஆன்மிகச் சுற்றுலா குறித்து, ”புனித இடங்களுக்குச் செல்லல், சமயத்தோடு தொடர்புடைய இடங்களுக்குச் செல்லல், சமயத் தலைவர்கள் பிறந்த இடம், வாழுமிடம், மறைந்த இடம் போன்ற இடங்களுக்குச் சென்று வரும் சுற்றுலா அவ்வகைக்குள் அடங்கும் பண்டைக்காலத்தில் மக்கள் ஆன்மிகத்திற்காகக் கோயில், குளங்கள் உள்ள இடங்களுக்குச் சென்று வந்தனர். புண்ணிய இடங்களுக்குப் புனிதப் பயணம் செல்வது எல்லா நாடுகளிலும்

இருந்துள்ளது” (கிருட்டிணசாமி, வெ., 2001:41) என்று ஆன்மிகச் சுற்றுலா குறித்து விளக்குகிறார். இந்தியாவிற்கான வெளிநாட்டுச் சுற்றுலா பயணத்தில் ஆன்மிகச் சுற்றுலா முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்திய ஆன்மிகச் சுற்றுலாவை வட இந்தியப் பயணம், தென்னிந்தியப் பயணம் என்று இருபெரும் கூறுகளாகப் பகுக்கலாம். தென்னிந்தியப் பயணத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் ஆன்மிகப் பயணத்தில் முருகப்பெருமானின் அறுபடை வீடுகள், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவரங்கம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், காஞ்சி காமாட்சி, வைணவ 108 திவ்ய தேசங்கள், தேவாரம், திருவாசகம் பாடல் பெற்ற தலங்கள் முதலாயின முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழகத்தின் ஆன்மிகச் சுற்றுலாவில் மதுரை இன்றியமையாத தலமாகும். புராண, இதிகாசங்களிலும் இலக்கியங்களிலும் இந்து சமய நூல்களிலும் மதுரையில் அமைந்துள்ள முருகப்பெருமானின் அறுபடை வீடுகளும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் மதுரையைச் சூழ்ந்துள்ள பிற வழிபாட்டுத் தலங்களும் தொன்றுதொட்டு போற்றப்பட்டுவருகின்றன.

### உலகப் பதிவுகளில் மதுரை

முதல், இடை, கடைச் சங்கங்கள் போற்றிய நகரம் மதுரை நகரமாகும். மதுரை நகரின் சிறப்பினைக் காலந்தோறும் இலக்கியங்கள் பதிவு செய்து வருகின்றன. இலக்கியத் தொன்மையும் நீண்ட நெடிய வரலாற்றையும் உடைய மதுரை மாநகர் தமிழர்களின் கலாசாரம், பண்பாடு, கலைகள் மிக்க வாழ்வியலை அறிய உதவும் மாநகராகும். தமிழர் போற்றிய காதலும் வீரமும் தமிழர் வணங்கிய கடவுளுக்கான கோவில்களும் தமிழர் அடையாளம் தாங்கிய பல்வேறு தொல்லியல் நினைவுச் சின்னங்களுடன் மதுரை மாநகர் விளங்குகின்றது. கூடல் மாநகர், மதுரையம்பதி, நான்மாடக்கூடல், மீனாட்சி பட்டினம், ஆலவாய், கடம்பவனம், அங்கண் மூதூர், தூங்கா நகரம், கோவில் நகரம், பூலோக கயிலாயம் என்று பல்வேறு பெயரிட்டு இலக்கியங்கள் போற்றும் இந்நகரைக் கிழக்கின் ஏதென்ஸ் என்றும் மேலை நாட்டவர் சுட்டுவர். மதுரை பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி, திருவிளையாடல் புராணம், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சொக்கநாதர் உலா, தமிழ்விடு தூது உள்ளிட்ட பல்வேறு சங்கப் பாக்களும் புராண இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் பாங்குற விளக்குகின்றன. மதுரை நகரின் அழகிய வடிவமைப்பு குறித்து பரிபாடல்,

“மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்
தரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்” (பரிபாடல் 1: 1-4)

என்று தாமரை மலர் போன்ற அமைப்பு, கோவில் சிறப்பு குறித்து வருணிக்கின்றது.

"பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் மாநகர்''

(சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை: 5)

சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டத்தில் மதுரை மக்கள் புலம் பெயர்தல் என்பதையே அறியாதவர்கள் என்று மதுரை நகரின் பல்வேறு சிறப்புக்களை இளங்கோவடிகள் விளக்குகின்றார்.

மதுரை பற்றிய பதிவுகள் இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதம் மட்டுமின்றி இலங்கையின் தொல்வரலாற்று நூலான மகாவம்சத்திலும் காணப்படுகின்றன. உலக பயணாளராய்ச் சுட்டுப்படும் மெகஸ்தனிஸ் தன்னுடைய பயண வரலாற்றில் மதுரை குறித்த தகவல்களைப் பதிவு செய்துள்ளார். உலகின் வரலாறு கூறும் பல்வேறு தொல்லியல் பதிவுகளில் மதுரை முக்கிய பங்கு வகிக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை நகரை கோவில் நகரம் என்று போற்றப்படும் தன்மையில் பல்வேறு திருத்தலங்கள் நிறைந்த ஆன்மிகப் பூமியாய் மதுரை மண் இன்றளவும் காட்சியளிக்கிறது.

**கலாசாரப் பயணம்**

மதுரை நோக்கிய கலாசார பயணத்தில் அந்நகர்சூழ அமைந்துள்ள ஆறுகள், முருகனின் படைவீடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

**வையை ஆறு**

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகும் வையை ஆறு தமிழகத்தின் நான்காவது பெரிய ஆறாகப் போற்றப்படுகின்றது. வையை ஆற்றின் நீளம் 258 கி.மீ., பாசனப் பரப்பு 7031 ச.கி.மீ. ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி பல்வேறு துணை ஆறுகளான சுருளியாறு, தேனியாறு, வரட்டாறு, வராகநதி, மஞ்சளாறு, நாகலாறு, மருதநதி, சிறுமலையாறு, சாத்தையாறு முதலிய ஆறுகளுடன் கலந்து வையை ஆறு பெருக்கெடுக்கிறது. தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் என்று நான்கு மாவட்டங்களில் பாய்ந்து ஓடி நிறைவாகக் கடலில் கலக்கின்றது. வையை நதி தமிழ் இலக்கியங்களில் வெகுவாகப் பாராட்டப்பட்ட முக்கிய நதியாகும். பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் நதியை குறித்து ஆங்காங்கு பாடிச் செல்லும். ஆனால் ஒரு நதியை மட்டுமே முற்றிலும் போற்றும் வகையில் முழுப்பாடல் பெற்ற ஒரே நதி வையை ஆகும். பரிபாடல் வையை ஆற்றினை மட்டும் போற்றும் நூல். பரிபாடலில் ஒன்பது பாடல்கள் வையை ஆற்றைப் போற்றுகின்றன. இத்தனிப்பாடல்களில் அகத்திணை செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. பாண்டியனின் ஆட்சிச் சிறப்பு, மதுரையின் சிறப்பு, வையை ஆற்றங்கரையில் அமைந்துள்ள மக்களின் வாழ்வியல் குறித்து மிக அழகாகப் பரிபாடல் காட்சிப்படுத்தியுள்ளது.

"வளி வரல் வையை வரவு" (பரிபாடல் 12: 8)

"நறுநீர் வையை" (பரிபாடல் 11:140)

"பூமலி வையை" (பரிபாடல் 20,111)

"வளம்கெழு வையை" (பரிபாடல்: 17,44)

"தமிழ் வையைத் தண்ணம்புனல்" (பரிபாடல்: 6,90)

"தண்வரல் வையை" (பரிபாடல் திரட்டு: 3,5)

"நறுநீர் வையை நயத்தகு நிறையே" (பரிபாடல்: 11,140)

என்று வையை ஆற்றைத் தமிழ் வையை என்றே பரிபாடல் போற்றுகின்றது. பரிபாடல் மட்டுமன்றி தமிழின் பல்வேறு இலக்கியங்களில் வையையாறு குறித்த பதிவுகள் காணக்கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்தில் மதுரை நோக்கிய பயணம் குறித்த பேசும் இடங்களில் வையையாற்றை இளங்கோவடிகள் தமிழோடு இணைத்து வருணிக்கின்றார்.

"புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி

வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" (சிலப்பதிகாரம்: 170)

வையை ஆற்றின் இன்றைய முக்கிய நிகழ்வாக அமைவது ஆண்டுதோறும் மதுரை மாநகரில் கொண்டாடப்படும் சித்திரைத் திருவிழா ஆகும். மீனாட்சித் திருக்கல்யாணம், கள்ளழகர் வையை ஆற்றில் இறங்கும் உற்சவம் உள்ளிட்ட நிகழ்வுகளில் வையை ஆறு முக்கிய பங்கு வகிக்கின்றது. வையை ஆற்றங்கரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரள ஆற்றுப்படுகைமுழுதும் சித்திரை முழுநிலவு நாளில் திருமால் வையை ஆற்றில் இறங்கும் உற்சவம் மதுரை நோக்கிய ஆன்மிகப் சுற்றுலாவிற்கு ஈர்க்கின்றது. மைசூர் தசரா, கேரளா ஓணம் போன்று தமிழகத்தில் மதுரை என்றாலே வையை ஆற்றின் சித்திரைத் திருவிழா தான் முன்னெடுக்கப்படும். உலகத் தமிழர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களையும் மதுரை நோக்கிய சுற்றுலாவிற்கு ஈர்க்கும் முக்கிய நிகழ்வாக வையை ஆறு தாங்கிய விழாக்கள் அமைகின்றன. உலகத் தொல்லியல் ஆய்வாளர்களின் ஆய்வுப் பயணத்திற்கான சான்றாதாரமாகவும் வையை திகழ்கின்றது.

**திருப்பரங்குன்றம்**

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் அறுபடைவீட்டில் முதலாவது படைவீடு திருப்பரங்குன்றம். முருக பக்தர்களின் பயணத்தில் திருப்பரங்குன்றம் முதல் தளம் ஆகும். பரங்குன்று சிவனுக்குரிய தலமாகவும் முருகப்பெருமானுக்குரிய தலமாகவும் போற்றப்படுகின்றது. தமிழர்களின் கட்டுமானத்திற்கு சிறந்த சான்றாக, பழமையான குடைவரை கோவிலாகத் திருப்பரங்குன்றம் காணப்படுகின்றது. மலைப்பகுதியில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளைக் கோவிலாக மேம்படுத்தும் கட்டுமானக் கலை நுட்பம் உடைய கோவில் குடைவரைக் கோவிலாகும். மதுரைக்குத் தெற்கே அமைந்துள்ள மலைக் கோவில் திருப்பரங்குன்றம். இந்திரனின் மகளான தெய்வயானையை முருகப்பெருமான் பங்குனி உத்திர நாளில் திருமணம் செய்துகொண்ட விழா ஆண்டுதோறும் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது திருமணத்தடை விலகப் பரிகாரத் தலமாகவும் விளங்குகின்றது. தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படை திருப்பரங்குன்றத்தைப் பெரிதும் போற்றுகின்றது. திருப்பரங்குன்றத்தை,

“முருகன் குன்றம்” (அகநானூறு: 59)

“தனிமழை பொழியும் தண் பரங்குன்றம்” (மதுரைக் காஞ்சி: 264)

“தேவர் பணிந்தெழு தென்பரங்குன்றுறை பெருமாளே’’ (திருப்புகழ்: 9)

என்று தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. அருணகிரிநாதர் முருகனைப் போற்றிப் பாடிய பாக்களில் திருப்பரங்குன்றமும் இடம்பெற்றுள்ளது. சிலப்பதிகாரம், கந்தபுராணம் உள்ளிட்ட பல்வேறு இலக்கியங்களில் திருப்பரங்குன்றம் போற்றப்பட்டுள்ளது. சுந்தரர் பாடிய தேவாரத்தில் அவர், இத்தலத்தில் இறைவனை வழிபட்ட தகவல்கள் கிடைக்கின்றன. பாண்டிய நாட்டிற்கு உரிய பதினான்கு சிவத்தலங்களில் திருப்பரங்குன்றமும் ஒன்றாகும்.

மதுரை நோக்கிய ஆன்மிகச் சுற்றுலாவில் இந்து சமய வழிபாட்டில் சிவத்தலமாகும் முருகு தலமாகவும் முதலாவது படைக் கோவிலாகவும் விளங்கும் திருப்பரங்குன்றம் இன்றியமையாத ஆன்மிகச் சுற்றுலாத் தலமாகும்.

**பழமுதிர்ச்சோலை - திருமாலிருஞ்சோலை**

முத்தித் தலமாகவும் ஆறாம் படை வீடாகவும் போற்றப்படும் பழமுதிர்ச்சோலை மலை முருகனுக்கு உரியது என்றும் திருமாலுக்கு உரியது என்றும் இருவேறாகக் கூறுவர். திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், திருப்புகழ் பழமுதிர்ச்சோலையை முருகப்பெருமானுக்குரிய மலையாய்ப் போற்றுகின்றது. அவ்வையாரின் ஞானச்செருக்கை உணர்த்தும் நோக்கில் முருகப்பெருமான் சிறுவனாய் வடிவெடுத்து சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று வினவும் நிகழ்விற்குரிய மலை பழமுதிர்ச்சோலை ஆகும். திருமாலுக்குரிய மலையாகத் திருமாலிருஞ்சோலையாக பரிபாடல் இம்மலையை வருணிக்கின்றது. இலக்கியங்களில் போற்றப்படும் சோலைமலைக்கு மேல் முருகப்பெருமான் கோவிலும் மலைக்கு அடிவாரத்தில் திருமாலுக்கு உரிய கள்ளழகர் கோவிலும் அமைந்துள்ளன. இக்கோவிலில் உள்ள அழகர் பெருமானே கள்ளழகராய் வையை ஆற்றில் இறங்குகிறார். அழகிய சிற்பங்கள் உடைய இக்கோவில் ஆழ்வார்களால் போற்றப்படும் 108 திவ்ய தேசங்களுள் ஒன்று. அழகர் கோவில் மங்களாசாசனம் பாடப்பட்ட கோவில். சைவம், வைணவம் ஒற்றுமை போற்றும் விழாவாக மதுரைச் சித்திரைத் திருவிழா அமைந்துள்ளது. அதேபோன்று சைவ-வைணவ ஒற்றுமை கூறும் மலையாகவும் சோலைமலை அமைந்துள்ளது. மதுரையில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அழகர் கோவில், ஆன்மிகத் திருத்தலத்தில் முக்கியத் தலமாகவும் போற்றப்படுகின்றது. சைவ, வைணவ அடியவர்களின் மதுரை நோக்கிய சுற்றுலா பயணத்தில் இத்தலம் இன்றியமையாதது. ஆண்டுதோறும் முருகப்பெருமானுக்குரிய வழிபாடும் திருமாலுக்குரிய வழிபாடும் இம்மலையில் நிகழ்கின்றன. இம்மலையின் மற்றொரு முக்கிய சுற்றுலாத் தலம் இம்மலையின் தீர்த்தமான சிலம்பாறு (நூபுரகங்கை) ஆகும். முருகப்பெருமானின் அருளால் உருவான தீர்த்தம் என்று சுட்டப்படுகிறது. இச்சிற்றாறு புனித நீராகக் கருதப்படுகிறது.

“சிலம்பாறு அணிந்த, சீர்கெழு திருவின்
சோலையடு தொடர் மொழி மாலிருங்குன்றம்” (பரிபாடல்: 15)

“ஓங்கு உயர் மலையத்து உயர்ந்தோன் தொழுது,
சிந்தையில் அவன்-தன் சேவடி வைத்து,
வந்தனை மும் முறை மலை வலம் செய்தால்,
நிலம் பக வீழ்ந்த சிலம்பாற்று அகன்தலை” (சிலப்பதிகாரம்: 110)

என்று பழந்தமிழ் இலக்கியங்களான பரிபாடல், சிலப்பதிகாரம் சிலம்பாறு குறித்து விளக்குகின்றன.

சிலம்பாறு இன்று குறுகிய தீர்த்தமாகக் காட்சியளிக்கின்றது. அழகர் மலைக்கு வரும் பக்தர்களுக்குத் தீர்த்தமாகச் சிலம்பாற்றின் நீர் வழங்கப்படுகின்றது. ஆடிமாதத்தில் அங்குள்ள இராக்காயி அம்மனை வணங்கி, தீர்த்தமாடிச் செல்வது மக்கள் வழக்கம். இங்கு அமைந்துள்ள பதினெட்டாம்படிக் கருப்பசாமி விழா சிறுதெய்வ வழிபாட்டின் உச்சம் எனலாம். ஐப்பசி மாதத்தில் அழகர் நீராடல் நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இதனால் ஆண்டுதோறும் மழை செழிப்பு மிக்கதாகவும் வழிபாட்டுச் சிறப்புற்றதாகவும் இம்மலை திகழ்கின்றது. இம்மலைப் பயணம் உள்ளத்திற்கு புத்துணர்ச்சியையும் மூலிகைக் காற்றினால் உற்சாகத்தையும் வழங்கும்.

**நிறைவுரை**

சுற்றுலா மனிதனின் உலகியல் அறிவு, பல்லினச் சூழல், மானுடப் பண்புகளை அறிவதற்கு உதவுகிறது. சுற்றுலாவின் வகைகளுள் ஒன்றான ஆன்மிகச் சுற்றுலா புனிதப் பயணமாகச் சுட்டப்படுகின்றது. அவ்வகையில் மதுரை நோக்கிய ஆன்மிகச் சுற்றுலாவில் அறுபடைவீடுகளுள் முதல் படைவீடான திருப்பரங்குன்றம், ஆறாம் படைவீடான பழமுதிர்ச்சோலை ஒருங்கே அமையப்பெற்ற நகர் மதுரை. முருகப்பெருமானின் அருள் பெற வேண்டி ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் உலகத் தமிழர்களின் இன்றியமையாத சுற்றுலாத்தலமாக மதுரை விளங்குகின்றது.

தமிழர்களின் தொன்மையை, உயர் நாகரிக வாழ்க்கையை அறிந்து கொள்ளும் நிகழ்வாய்ச் சித்திரைத் திருவிழா விளங்குகிறது. சித்திரைத் திருவிழாவில் மீனாட்சித் திருக்கல்யாணம், வையை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் நிகழ்வு வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. உலகளாவிய மக்களை, குறிப்பாக வெளிநாட்டவரை ஈர்க்கும் விழாவாகச் சித்திரைத் திருவிழா அமைந்துள்ளது. மதுரை நகரில் இலக்கியங்கள் போற்றும் ஆறுகளான வையை ஆறும் சிலம்பாறும் சித்திரைத் திருவிழாவோடு தொடர்புடையவை. தமிழர்கள் பாரம்பரியம் மிக்க வாழ்வியலைப் பெற்றிலங்குகின்றனர் என்பதற்கு இன்றுவரை மதுரை நகர் மாபெரும் சான்றாய் விளங்குகின்றது. தமிழர்களின் நுண்கலை வடிவான குடைவரைக் கோவில் கட்டடக் கலைக்குத் திருப்பரங்குன்றம் சான்றாகும். அழகிய

சிற்பங்கள் உடைய கோவிலுக்கு அழகர் மலைக் கோவில் சான்றாகும். தமிழர்களின் கலை வடிவம், இறை நம்பிக்கை, ஆற்றங்கரை நாகரிக வாழ்க்கை முறை முதலியனவற்றை எடுத்துக்காட்டும் சான்றாதாரங்களாய் வையை, சிலம்பு ஆறுகளும் இருபடை வீடுகளும் அமைந்துள்ளன. உலகின் மூத்தகுடி தமிழினமே என்பதற்கான சான்றாய்க் கீழடி உள்ளிட்ட தொல்லியல் சான்றாய்வுத் தலங்களையும் மதுரை நகர் சுற்றுலாவில் காணலாம். மேலும் சிலப்பதிகார எச்சங்களையும் மதுரைப் பயணத்தில் காணமுடியும். தமிழ்நாட்டின் மையப்பகுதியான மதுரை நகரம் ஆன்மிகச் சுற்றுலா, தொல்லியல் ஆய்வுத் தலமாகவும் விளங்குகின்றது. உலகளாவிய இந்து சமயத்தினருக்கான புண்ணிய தலமாகவும் இந்து சமயத்தின் அடித்தளமாகவும் மதுரை மாநகர் இன்றளவும் காட்சியளிக்கின்றது.

## உசாத்துணை


அம்பை மணிவண்ணன், (2010), பொற்றாமரை, ஏ.ஆர் பப்ளிகேஷன்ஸ், மதுரை.

ஈஸ்வரன், ச., (2011), சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், சாரதா பதிப்பகம், சென்னை.

கதிர் முருகு, (2013), பத்துப் பாட்டு - மதுரைக் காஞ்சி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

கிருட்டிணசாமி, வெ., (2001), சுற்றுலா வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

கிருபானந்த வாரியார் சுவாமிகள், (2010), திருப்புகழ் விரிவுரை, வானதி பதிப்பகம், சிதம்பரம்.

தங்கமணி, ம.இ.ரா., (2004), சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், கொங்கு பதிப்பகம், கரூர்.

பரமசிவன், தொ., (1989), அழகர் கோவில், பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

புலியூர்க் கேசிகன், (உரை) (2009), பரிபாடல் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

வேங்கடசாமி நாட்டார், ந.மு., (உரை) (1957), அகநானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, திருநெல்வேலி.

வேங்கடசாமி நாட்டார், ந.மு., (உரை) (2005), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.